தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம், மானூர் வட்டம்,

திருநெல்வேலி மாவட்டம்.

அறிவிக்கை எண்.01/2025

நாள்:14.07.2025

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், மானூர் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 17.07.2025 முதல் | |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். | 16.08.2025 மாலை 5.45 மணி வரை | |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர். | |
| சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/- | |
| வட்டத்தின் பெயர்: | மானூர் வட்டம் | |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 01 | |
| நிரப்பப்படவுள்ள கிராமத்தின் பெயர் விவரம். | 28.சேதுராயன்புதூர் | முன்னுரிமை பெற்றவர் (ஆதிதிராவிடர்) |
| இனசுழற்சி | 06. SC – ஆதிதிராவிடர் (முன்னுரிமை) | |
| தகுதிகள் | | |
| கல்வித் தகுதி | 1. 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியை கட்டாய பாடமாக கொண்டு 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2. 10 - ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.<br>3. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் மானூர் வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். | |

| | | |
|---|---|---|
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது | 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்) (அறிவிக்கை வெளியிட்ட தேதி அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.) |
| | அதிகபட்ச வயது | 32* வயது (பொது பிரிவினர்)<br>37* வயது - (இதர பிரிவினர்)<br>பிற்படுத்தப்பட்டோர் /<br>பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) /<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர். |
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். |
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 48 வயது - பொதுபிரிவினர்<br>53 வயது - பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) /<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.<br>(* அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021-ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருநெல்வேலி மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://tirunelveli.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் மானூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். | |

வட்டாட்சியர் அலுவலக முகவரி

வருவாய் வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எட்டான்குளம் ரோடு,
மானூர் - 627201.

கோட்டாட்சித் தலைவர்
திருநெல்வேலி

வருவாய் வட்டாட்சியர்,
மானூர்.